செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஆு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்- சௌமிய ஆு பங்குனி மீ எ உ வெள்ளிக்கிழமை (2[illegible]-3-1970) [ இலஃசுக

## செந்தமிழ்க் கடலின்மீது எழுந்த செங்கதிர்ப்பானு

புலவர் சிகாமணி, பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

இவ்வுலகம் பல கோடி மக்களையும் பலகோடி சிவ கூட்டங்களையும் உடையது. மக்கள் தேசந்தோறும் குணஞ் செயல்களால் வேறுபாடுடையவர். பாரத நாடு பண்டைக்காலம் சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடைச் சக்கிரவர்த்திகளால் ஆளப்பட்டது. தமிழ் அரச மொழியாக விளங்கியது.

ஈழமண்டலம்: இலங்கை என்று கூறும் நம நாடும் தமிழ்வளம் பொருந்தியது யாழ்ப்பாணம் என்னும் பகுதியில் சமய நெறியும், தமிழ்ச் செல்வியின் திருநடனமும் திகழ்ந்தன. ஏடுகளில் சமய நூலகளும், இலக்கிய நூல்களும் ஆங்காங்கே அறிஞர்கள் போற்றிக் கற்று வந்தனர். புராணங்கள் படிக்கப்பட்டு வந்தன. நல்லூர் எல்லவரும் புகழ் குன்றெறி குமரநாயகன் திருவருள் பொலியுந் திவ்விய நகராகும். இத்தலத்தில் தமிழ்ச் சங்கமிருந்தமையும் புலவோர் கூறுவர். தமிழ்த் திருமகளார் தண்ணருள் பொலியச் செந்தமிழ்க்கடல் பெருக்கெடுத்து மேலெழச் செங்கதிர்ப்பானு அனைய சற்புத்திரர் 1822-ல் அவதரித்தார். அவர் தான் ஆறுமுகனார் அருளால் அவதரித்த ஆறுமுகநாவல பெருமானவர் தமிழகத்து மாத்திரமன்றி மேனாடுகளிலும் நாவலர் மாண்பு பிரகாசித்தது.

கலையின் கருணைக் கடல்: தான்தோன்றித் தம்பிரானை நிலவாது ஆசிய மாணாக்கர் முறையில் கற்றுக் கற்றகற்கேற்ற சன்மார்க்க நெறி பிறழாதவர். நாவலர் என்றால் வெறுபாடுமுண்டோ? சேனாதிராச முதலியார் சரவணமுத்துப் புலவ சிரோமணிகள் இலக்கண இலக்கிய சைவசித்தாந்த சாத்திரம் முதலியவைகளைக் கஷ்டப்பட்டுக் கற்றவர்கள். கற்க விரும்பியவர்களுக்கு அன்பு மீதூரக் கற்பதில் இரண்டொருவரே இருப்பார்கள் நாவலப் பெரியார் கற்ற

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

### மருந்துமாதுவர்

இருந்து சொல்லுவன்
கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத்
தோதினால்
பொருந்து நோய்பிணி
போகத் துரப்பதார்
மருந்து மாகுவர் மன்னுமாற்
பேறரே.

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசு சுவாமிகள்

### ஏழாலை- மேற்கு துவரைக்கலட்டி - வற்றப்பளை கண்ணகை அம்மன்கோவில்

எதிர்வரும் பங்குனி மூ 29-ம் நாள் 11-4-70 சனிக்கிழமையன்று ஷை கோயில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது வழமையாக பங்குனிக் கடைசித் திங்களன்று நடைபெற்று வந்த குளிர்ச்சி இவ்வாண்டு பங்குனி மூன்றந்திங்களிலன்று (30-3-70) நடைபெறும்

வருடாந்தப் பங்குனிக்குளிர்ச்சி 30-3-70 திங்கட்கிழமை நடைபெறும் அன்று தீக்குளித்தல் அன்னதானம் முதலியன நிகழும்

இவ்வாண்டு நிகழும் அலங்கார உற்சவத்தில் சுப்பிரமணியப் பெருமானும் விநாயகப்பெருமானும் எழுந்தருளி திருவீதி உலா வருவர். (ந. ஏ. நி.)

### இராமநாதன் இசைக் கல்லூரி

இராமநாதன் இசைக்கல்லூரியில் இசை பயின்று சங்கீதரத்தினம் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 19-3-70 வியாழக்கிழமையன்று இலங்கை அரசாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன அவர்கள் பட்டம் வழங்கினார்கள். ஈழத்தில் கர்நாடகக் கலையை வளர்க்க தீர்க்கதரிசியான ஸேர் பொன். இராமநாதன் அவரது மருகர் திரு சு. நடேசபிள்ளை ஆகியவர்களுடைய பெருமுயற்சி பாராட்டற்குரியது என இசைக்கல்லூரி அதிபர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை குறிப்பிட்டார்.

புதுக்குடியிருப்பில்

வவுனியா புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் அப்பாடசாலைத் தாபகரும், சைவப்பெரியாருமாகிய திரு சு. இராசரத்னம் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கல்லூரி ஆசிரியர் மாணவர் பொதுக்கூட்டம் நடத்தினர். கல்லூரி அதிபர் திரு கு. வி. செல்லத்துரை உட்படப் பலர் பேசினர்.

## இராசரத்தினச் செம்மல்

[திரு. க. சொக்கலிங்கம், (சொக்கன்) B. A. (Cey) தலைவர்; யாழ். சைவசமய அபிவிருத்திக்கழகம், நாயன்மார்கட்டு]

கொட்டிலாய்த் தொடக்கிக் கல்விக்
கோவில்க ளாக்கித் தந்தான்
செட்டுறச் செலவு செய்து
சின்னதைப் பெரிதாய் மாற்றித்
தொட்டதைத் துலங்கச் செய்து
தோல்வியை வெற்றி யாக்கிக்
கட்டினன் *கணக்கா யர்க்குக்
கவினுறு பயிற்சிப் பள்ளி. (1)

* கணக்காயர் — ஆசிரியர்.

'இந்துபோட்' என்ற சொல்லை
எவரிசைத் திடினு மாங்கே
சிந்தையி லிராச ரத்ன
செம்மலே நிறைந்து நிற்பான்
வந்தனர் போனர் சங்கம்
வளர்த்தவர் ஒருவர் இல்லை
அந்தமில் நாற்ப தாண்டாய்
அதற்குயி ரிராச ரத்னம். (2)

## அளந்து பேசுதல் நலம்

சைவராகிய நாம் கடந்த காலத்தில் நாவலர் பெருமான் இராமநாதன் துரை போன்றோருக்குக் கடமைப்பட்டதுபோல இந் நாளில் இந்துப்போர்ட் இராசரத்னம் அவர்களுக்கே கடமைப்பட்டுள்ளோம். சில விஷயங்களில் நாவலர் பெருமானினும் இராசரத்தினத்திற்கே அதிக கடமைப்பட்டுள்ளோம்—

எமது பாரம்பரியம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டது நாவலர் பிரமச்சரியத்தை அனுஷ்டித்து தொண்டு செய்தார். இராமநாதன்துரை பெரும் செலவராக இருந்து தொண்டு செய்தார் உருத்திராக்கம் பூணுமல் எம போன்றோரும் தொண்டு செய்யலாம என்பதற்கு எடுத்துககாட்டாக விளங்கியவர் இராசரத்தினமவர்களே"

இவ்வாறு வண்ணை வைத்தீசுவர வித்தியாலயம் அதிபர்

பரிசுத்தமானது சிக்கனமானது சலவைக்குச் சிறந்தது.




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

### இரதோற்சவம்

வண்ணை, ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி கோவில் இரதோற்சவம் பங்குனித்திங்கள் 8-ம் நாள் (21-3-70) சனிக்கிழமை நடைபெறும்.

திரு S சிவபாதசுந்தரம் அவர்கள் காலமசென்ற பெரியார் திரு. சு. இராசரத்தினம் அவர்களது ஈமக் கிரியைகள் நிகழ்ந்தபொழுது பேசியதாக ஒரு தினசரி மூலம் அறிகின்றோம்.

நாவலர் பெருமானுடைய பெருமையினையும், சைவ சாதனங்களினது மகிமையையும் உணர்ந்தவர்களுடைய உள்ளத்தில் இக்கூற்றுக்கள் வேதனையைத் தரும்.

### தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரியம்மன்கோவில்

தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரியம்பாள் கோவில் 7-ஆம் திருவிழாவாகிய நேற்று பகல் விசேட அபிடேக ஆராதனைகளும், இரவு விசேட மேளக்கச்சேரியும், புலவர்மணி தா. பொன்னம்பலம் அவர்களது சங்கீத கதாப்பிரசங்கமும், யாழ். நாயன்மார்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் திருமுறை பஜனையும் நடாத்தப்பெற்றது ஆங்கு இரதோற்சவம் 21-3-70 நிகழும்.

## நாவலர் கலைத் தொண்டின் காவலர்க்கு அஞ்சலி

'நாவலர் செய்த சைவத் தொண்டின் காவலனாக விளங்கியவர் திரு சு. இராசரத்தினம் என்று, நாவலர்பெருமான் கந்தபுராணசபை இந்துபோட் இராசரத்தினத்தின் மறைவு குறித்து நடத்திய இரங்கற் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

சைவப்புலவர் அ. கி ஏரம்பமூர்த்தி அவர்கள் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இராசரத்தினத்துக்கு சிலை எடுக்க முன்வருபவர்களுக்கு ஊக்கமளிப்பதென்றும், அவரது தொண்டினை மும்மொழிகளிலும் பிரசாரப்படுத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வித்துவான் க. கணபதிப்பிள்ளை பேசும்போது, இன்றைய சமூகத்துக்கு வேண்டிய சீர்திருத்தங்களை 40 ஆண்டுகளுக்கு முன்பே துணிந்து செய்த இராசரத்தினம் அவர்கள் தியாகம், அஞ்சாமை, இறையன்பு ஆகிய கொள்கைகளைக் கைவிடாது கடைப்பிடித்தார் என்றும் சொன்னர்.

திருவாளர்கள்: கு. வி. மகாலிங்கம், கா. இரகுநாதன் இ திருஞானசம்பந்தன், பொ. முத்துக்குமாரு முதலானோரும் பேசினர்கள்.

### அனுதாபக் கூட்டம்

சென்ற வியாழக்கிழமை நீர்வேலியில் வலி-கிழக்குத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு சு. இராசரத்தினம் அவர்கள பிரிவைக் குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்கக் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் பிரேரணையைப் பிரேரிக்க திரு த. சுப்பிரமணியம் அதனை அநுவதித்தனர். சங்கத்தலைவர் திரு க. இ குமாரசாமியும், திரு சு. இராசரத்தினம் அவர்களின் சேவையைப்பாராட்டினர்.

திரு சு இராசரத்தினத்தின் ஞாபகார்த்தமாக நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சௌமிய ஞு பங்குனி மீ எ-உ வெள்ளிக்கிழமை 1970

# இன ஒற்றுமை வேண்டும்

எங்கள் பிரதம மந்திரியாருட்படச் சில தலைவர்கள் நாட்டில் எல்லா இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்தாற்றான் நாட்டினது நலன் விருத்தியாகுமென மேடைகளிற் பேசுகின்றார்கள். ஆனால் அவர்கள் சிறுபான்மையினருக்குள் சனத்தொகையில் முதலிடம் பெற்றுள்ள தமிழர்களுடைய ஒற்றுமையைப் பெற வேண்டும் என்ற பரந்த நோக்கத்துடன் அவர்களுக்குரிய நீதியான உரிமைகளை வழங்கி, அவர்களும் இந் நாட்டுப் பிரசைகள், எமது சகோதரர்கள் என்ற உணர்வோடு செயலாற்றவேண்டுமென்றஎண்ணம் அவர்களிடத்தில் மிகக் குறைவாகவே இருக்கிறது எனலாம். இதற்கிடையில் வேறு சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்குக்கூடுதலான சலுகைகள் வழங்கப்பட்டுவிட்டன அதனால் தமிழர்கள் செல்வாக்குப் பெருகுகின்றது. சிங்களச் சாதி அழிந்துவிடுமென பிரலாபிக்கின்றார்கள் இவ் விதமான பிரலாபம் சிங்கள மக்களுடைய வாக்குக்களைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் அங்கத்துவத்தை அடைதற்கு அவர்கள் செய்கின்ற சூழ்ச்சியாகும் தமிழர்களைப் பொறுத்தமட்டில் சிங்களத் தலைவர்கள் பெரும்பாலும் தமிழர்களுக்கு அவர்கள் இழந்த உரிமைகளை வழங்கப் போவதில்லை. தமிழர்களுடைய கதி அதோகதி.

தமிழர்கள் ஒற்றுமைப்பட்டு தங்கள் நலனுக்கு உழைக்கக் கூடிய முறையில் இனிமேலாகுதல் பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிந்தனுப்புதல் புத்தியாகும். தமிழர்கள் தங்கள் உரிமைகளை இழந்து இன்னல்படுவதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கிடையிலுள்ள ஒற்றுமைக் குறைவே. சிறுபான்மையினராகிய தமிழர்களுக்குள்ளே எத்தனைக் கட்சிகள். ஒவ்வொரு கட்சியும் தமிழர்களுடைய நலனைக் காப்பதே தனது நோக்கமெனக் கூறுகின்றது தமிழர்களுடைய நலன் யாது. அவர்கள் இந்த நாட்டில் தங்கள மொழி, சமயம். வாழ்க்கை சம்பந்தமான உரிமைகளைப் பெற்று இந்த நாட்டை அவர்கள் தாய்நாடாகக் கொண்டு வாழ்வதே நலன். தமிழ்மக்களுடைய நலனுக்கு உழைக்கும்கட்சிகள்எல்லாம்இதனைஒத்துக்கொண்டால் ஏன் தமிழத் தலைவர்கள் ஒற்றுமைப்படக் கூடாது? தலைவர்கள் நான் எனது என்னும செருக்கற்று தாங்கள் செய்யும் பணி இறைபணியென்ற எண்ணத்தை மனத்தில் கொண்டால் அவர்களுக்குள் வேற்றுமை தோன்ற இடமில்லை.

தேர்தல் காலத்தில் தேர்தலுக்கு முன் வரும் அங்கத்தவர்கள் மக்களுடைய வாக்கைப்பெறும் நோக்கத்துடன் தங்களுடன் போட்டிபோடும மற்றைய அங்கத்தவர்களைக் குறைகூறுவது இயற்கையாகிவிட்டது. அத்தகைய தொழில புறங்கூறுதல் என்னும குற்றத்தின் பாற்படும்.

"அறங் கூறான் அல்ல செய்யினும் ஒருவன்
புறங்கூறானென்றல் இனிது"

ஒருவன் பிறருக்கு அறனைப்பற்றி பிரசங்கிக்கத் தவறினாலும் பாவச்செயலகளைப் புரிந்தாலும் அவன் இன்னொருவனைப்பற்றி அவனில்லாதவிடத்தில் குறை கூறுதல் தகாத செயலாகும். அவன புறங்கூறாதிருத்தலே புத்தியின் பாற்பட்ட செயலாகும். தேர்தல் காலத்தில் புறங்கூறுதலே நாட்டில் தாண்டவமாடும்.

மக்கள் நல்லாக வாழவேண்டும். சான்றோராக வாழவேண்டும். அத்தகைய மக்கள் உள்ள நாடே நாடாகும். அங்ஙனம் உதவக் கூடிய மக்கள இல்லாதிருத்தலே நாட்டுக்கு வறுமை பயப்பதாகும்.

மக்கள் நலனுக்கு உழைக்கின்றவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும்,

"நாடெல்லாம் வாழக்கே டொன்றுமில்லை"

என்ற வாக்கியத்தைத் தினமும் சொல்லிக்கொள்வார்களாக. மனத்திலே அவ்வாக்கியத்தின் உண் [illegible] பதித்துக்கொண்டு செயலாற்றுவார்களாக. அப்பொழுது அவர்களிடத்தில் இனத்துவேஷம் தலைகாட்டாது. நாடு நாடாக விளங்கும்.

# அருள் வாழ்வு

திரு. சோ. க. வேலாயுதர், கொழும்பு

நாமொவ்வொருவரும் நமக்கு விரும்பியவர்மாட்டு அன்புடையவராய் இருக்கின்றோம். நமது பெற்றோர், பெண்டீர், மகார், மித்திரர். உற்றார் உறவினர் ஆகியோரிடம் நமது அன்பைப் பலபடச் செலுத்துகின்றோம். இதே போன்று நாம் நம்மிலும் கீழ்தரமான விலங்குகள், பறவைகள் மரஞ்செடி கொடிகள் ஆகியவற்றினிடமும் அன்பை அல்லது பரிவைச்செலுத்துகின்றோம். இப்படியாக இந்த அன்பானது தன்னைச் சாராதாரிடத்தும் பிரதிபலன் செய்யாதார்மாட்டும் ஏன் உலகிலுள்ள சகல சீவராசிகளிடத்தும் செலுத்தப்படின் அதனை அருள் என்று கூறலாம்.

"அருள் எனும் அன்பீன் குழவி" என்றார் வள்ளுவ நாயனாரும். இறைவன் நம்மை எல்லாம் தனது திருவருட்டிறத்தால் ஆட்டிப் படைக்கின்றான். அவனது அருள் தைலதாரை போன்று இடையறாது ஆருயிர்கள் மீது பொலிந்து கொண்டிருக்கின்றது. அவனது அருளின்றி ஆருயிர்கள் அவனின் கண் அல்லலின்றி வாழ முடியுமோ! சற்றே சிந்தியுங்கள்.

"அருளிலார்க்கவ்வுலகமில்லை பொருளிலார்க்கிவ்வுலக
மில்லை" என்றார்

செந்நாப் போதாரும். இந்நிலவுலகிலே வாழுகின்ற நாம் பொருள் இல்லாவிடின் எவ்வளவு இடுக்கண் அடைகின்றோம். சீரிய சிறப்பு மிக்க வாழ்வு வாழ முடியாது மனங்கவன்று வியாகுலமுடையவராய், ஏதோ பிறந்து விட்டோம் வாழ்ந்து போவோம் என்ற மனங்கொண்டாராய் வாழுகின்றோம. வாழ்க்கையில் விரக்தியேற்படுகின்றது. இவ்வுலக வாழ்வு பொருளின்றி எவ்வளவு வளம்பெறுதோ அதேபோல அருள் இல்லாதார்க்கு அவ்வுலகு—துறக்க வுலக வாழ்வுங் கிட்டமாட்டாது. இறையனின் அருட்கிரணங்கள் ஆன்மகோடிகளிடம் வீழ்ந்துகொண்டிருந்தாலும் அதனை அறிந்துணர்ந்து வாழாதவர்க்கு அதனால் ஏதும் பயனின்று என்பது யாவரும் அறிய வேண்டுவது ஒன்று. இந்த அருளை ஓர்ந்தறிந்து அதனுள் திளைப்பார்க்கு வானவர் உலகம் வழி திறக்கும் என்பதற்கையமுளதோ.

எனவே இறைவனின் இன்னருளைச் செவ்விதின் அறிந்து அதனுள் திளைத்தற்கு நாம் எவவாற்றான் நம வாழ்வை அமைக்க வேண்டும் என சிந்தனை செய்வோமாக. நாமெல்லாம் உலகிலே நம் மனம் போனபடிதான் வாழ விழைகின்றோம். இதற்காகவே, நமது தமிழ் மூதாட்டி ஔவையாரும்,

"மனம் போனபடி போக வேண்டாம்" என பாலரும் பயின்று பழகும்படி இலகுவான தமிழில் பாடிப் போந்தார். வாழ்க்கையை வகுத்து வரம்புகட்டி, அதனுள் நெறிபிறழாது ஏதாவது ஒரு குறிக்கோளுடன் வாழ்வதெனறால் எமக்கு அது வேம்பாக கசக்கின்றது. அத்தகைய வாழ்க்கையை எதற்கு வாழவேண்டும் என்று கூடப் பலர் கேட்டிருக்கின்றனர். எப்படியும வாழலாம் என்று வாழ்வது சுலபம். இப்படித்தான் வாழவேணடுமென்று வாழுவதுதான் கடினம். ஒரு வாய்க்காலில் நீரை ஓடவிடுவதற்கும அதனை நிலத்தில் வழிவாய்க்காலின்றி ஓடவிடுவதற்கும் வித்தியாசமுண்டல்லவா. வாய்க்காலில ஓடுவதனை வேண்டிய இடத்திற்குப் பாய்ச்சுவதற்கு முடியும் அது மட்டுமலல அதனில உடைப்புகள் பலபடி ஏற்படும். அவற்றைக் அணைத்துக் கட்டிநீரைச்சரியான வழியில் ஓடவிட வேண்டும. இதே போன்றதே குறிக்கோளுடைய வாழ்வுமாகும். இதனைத் தான் அப்பர் பெருமானும், "குறிக்கோளிலாது வாழ்ந்து கெட்டேன்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

— —

## செந்தமிழ்க் கடலின்மீது .....

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

ஆரியம், தமிழ், ஆங்கிலம் அவருடைய விவேகத்தை நன்கு புலப்படுத்தும். கிறிஸ்தவர் வேதமாகிய 'பைபிள்' நாவலரின் ஆராய்ச்சியுடையது.

அக்கால நிலை: மேனாட்டுக் கிறீஸ்தவ சமயம் நம்நாட்டு யாழ்ப்பாணத்திலும் கப்பல் மூலம் வந்து சேர்ந்தது. கல்வியும் சமய போதனையுமே அவர்கள் (கிறீஸ்தவர்கள்) சமயம பரப்பக் கண்ட வழிகள். நாவலரவர்கள் கல்வி பிரசங்கமும் பரவக் கூடிய அரிய வழிகளைப் பின்பற்றிப் பல எதிர்ப்புக்களைத் தாண்டி அஞ்சா நெஞ்சுடன் தமிழ் மக்களை மக்களாக்கியதை மறுப்பாருமுண்டா? ஆ! தன்னரியபொன்பெறு காலம் முழுதும் சமயப்பேரொளி வீசச்செய்த பேரொளிப்பானுவுக்கு ஏதும் கைம்மாறு செய்ய முடியுமா?

அரிய பெரிய சாதனைகள்: நாவலரவர்கள் கல்வி நிலையத்தையும், மாணாக்கர்கள் இலகுவாகக் கற்க உயரிய போதனா வழிகளையும் நிலைநாட்டினார். சைவவினாவிடை முதற் பாலபாடம் முதலியவைகள் அன்பர்களாகிய தமிழ் மக்களாகிய முன் ஆங்கிலம் பெரிதென்ற சிந்தையுடையார் முன் இன்றும் காட்சியளிக்கின்றன. புராணங்கள் சித்தாந்தப் பெருநூல்கள் மட்டுமா? சைவப்பிரசங்க அமிழ்தைக் கேட்டார் பிணிக்குமாறு பொழியும் வன்மை இன்றும ஒலிக்க நோக்கலாம். பெரியபுராண உபோற்காதமும் சூசனமும் நன்குபயின்றாலே பெருமபுலவராகலாம் போதுமா? இலக்கண வினாவிடை முதல் தொல்காப்பியம வரையில் மாணாக்கர்கள் படிக்கக் காலந்தான் போதாது. ஆகவே ஆண்டு தோறும் வரும் குருபூசையைச் சிரத்தையுடன் செய்வதே முதற்கடமையாகும்.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

# பேராதனை முருகன் கோயில்

"மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தபோதும், இங்கு நான் நிற்கும்போது என் சொந்தநாட்டில்நிற்பதுபோல உணருகிறேன்" என்று பேராதனைப் பல்கலைக் கழக ஹிந்திப் பேராசிரியரான கலாநிதி சுக்லா அவர்கள் சிவராத்திரியன்று இரவு பல்கலைக் கழகக் குறிஞ்சிக் குமரன் கோயிலில் பல நூற்றுக்கணக்கான இந்து மாணவ மாணவிகளின் முன்னிலையில் 'சிவ மந்திரம்' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் சிவராத்திரி விரதத்தின் மகிமை, சிவபெருமான் பாரதநாட்டிற் கோயில கொண்டுள்ள புண்ணிய ஸ்தலங்களின் பெருமை என்பனபற்றி விரிவாகக் குறிப்பிட்டார் டாக்டர் கே. சி. துரைராஜா அவர்களது உபயமாக மஹாசிவராத்திரி கொண்டாடப்பட்டது. பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் நித்திரை விழித்து இறைவனைத் தரிசிப்பதற்காகக் கூடியிருந்தனர். மாலை 5-15 க்கு வழமையான பூசையுடன் ஆரம்பமாகி அதிகாலை 6 மணிவரை தொடர்ந்து அபிஷேகாராதனைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பேராதனைப் பல்கலைக் கழக உதவி நூலகரான கலாநிதி சுக்லா பாடிய பாடல்களுக்கு திரு. சி முருகவேள் பொருள்கூறினார். அதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் சமய விரிவுரை நிகழ்த்தினர்.

— — —

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 125 சிவன்கோவில் வடக்கு வீதி திரு க. தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1969ஆம் ஞு மார்ச் மீ 1ஆம் உ (1-3-69) முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970ஆம் ஞு ஏப்பிரல் (சித்திரை) மீ 8உ 8-4-70) புதன் கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளரும் கோட் கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எம். 460 13, 20—3—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T. பேரம்பலத்தின் கைம்பெண் காமாக்ஷிபிள்ளை, நாவலர் ரோட் அரியாலை, யாழ்ப்பாணம். —வழக்காளி
வழ: இல M. B. 9789 எதிராக
பொன்னுத்துரை. சிவபாதசுந்தரம், 44 கச்சேரி இழக்கொழுங்கை யாழ்ப்பாணம், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B. 9789-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹூ சித்திரை மீ 12-ம் திகதி (12-4-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபா 3645/- 5-3-68 தொடக்கம் 16-11-68 வரைக்கும் ரூபா 3000/—க்கு 12% வட்டியும் அதன் பின் (16-11-68 தொடக்கம்) முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 240/97 சதம் 13-9-69இல் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1000/- நீக்கி.

ஆதன விபரம்

வடமாகணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டுக்குளி கோயிற்பற்று, இவியாதெரு இறை "பிராயடி வளவும் மது பிரிவும்" நிலப்பரப்பு 7 குளிகள் 4,13/32, தற்போது அளவு படத்தின்படி நில பரப்பு 4. ஆவ்வளவு படம் உத்தரவு பெற்ற உலாந்தா C. இராசகாரியர் அவர்களால் 22-5-65ல் தயாரிக்கப்பட்ட அளவு படம் இலக்கம் 965இன் படி நிலப்பரப்பு 4-ம் தெற்குப் பக்கக் காணியில் இருக்கும் கிணற்றில் உருமையும் வழிவாய்க்காலும், எல்லை கிழக்கு சந்தனமாதா கோவில் ஒழுங்கை, வடக்கு கச்சேரி இழக்கொழுங்கை, மேற்கு கதிரவேலு. பொன்னுத்துரைக்குரிய காணி, தெற்கு தில்லையம்பலம் பெண் செல்லம்மாவுக்கும் கதிரவேலு பெண் லெட்சுமிக்கும் உரிய ஆதனங்கள் D 210/142ல் கீழ் பதியப்பட்டது.

வே. கோபாலபிள்ளை
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். எம் 463 20—3—70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சண்முகம் இளையதம்பி நீர்வேலி. —வழக்காளி
இல: M. B. 9809 எதிராக
கனகசபை சபாபதி தற்போது காட்டு இலாகா பகுதி திருகோணமலை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B, 9809ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹூ சித்திரை மீ 18-ந் திகதி (18-4-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 5920/- 8-3-68 தொடக்கம் 30-3-69 வரைக்கும் ரூபா 4000க்கு 10% வட்டியும் அதன் பின் முழுததொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 416/61 சதம்.

ஆதன விபரம்

வடமாகணம், யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "குறப்பத்தினி" நில பரப்பு ஒன்பது (9) செய்பயிர் வகைகளும், வீடும் இந்தக் காணிக்குக் கிழக்குக்கல்லைக்குக கிழக்கெல்லைக காணிக் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் எல்லை கிழக்கு பேரம்பலம் தம்பையாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கனகசபை. சண்முகத்திற்கும் மறு பெயர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு சிவக்கொழுந்து வேலாயுதபிள்ளைக்கு பங்காளர்களுக்குமுரிய ஆதனம்; இதடங்கலும்: K. 210/35ன் கீழ் பதியப்பட்டது.

22. ஆஸ்பத்திரி வீதி, வே. கோபாலபிள்ளை,
யாழ்ப்பாணம், கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 462. 20—3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர், விளானை சிதம்பரப்பிள்ளை சண்முகம் கனகரத்தினம்
வழ. இல. M. B. 9059 எதிராக —வழக்காளி
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, 19/3, சிவப்பிரகாசம் வீதி, முருகேசு மாணிக்கம் —எதிராளி

மேற்படி டிஸ்திறிக் கோட்டின் M. B. 9059-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஹூ ஏப்றில் மீ 27-ம் திகதி (27-4-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6364/- இன்னும் ரூபா 4000/-க்கு 7-5-67 தொடக்கம் 1-10-68 வரை 15வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுமபடும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 312/-ம்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை "தட்டேகள் தாழ்வு" நி. பா. (4) நாலும, வீடும் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும், இதில் வடக்குப் பக்கமாக நி. பா. 2 இது 9-9-58ல் உத்தரவு பெற்ற உலாந்தா வீ. வீ. தமாரசாமி அவர்கள் 131-ம் இலக்கத்தில் உண்டாக்கப்பட்ட படத்தில் 2ம் கண்டமாக விவரிக்கப்பட்டுள்ளது இந்த நி. பா. (2) இரண்டும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களுக்கும் எல்லை கிழக்கு ஆறு அடி அகலம் கொண்ட ஒழுங்கை, வடக்கு சுப்பிரமணியம் பெண் முத்தம்மாவினுதனம், மேற்கு கனகரத்தினம் அப்பையாவினுதனம், தெற்கு குறித்த படத்தில் 1ம்கண்டமென விவரிக்கப்பட்டிருக்கும் தம்பிமுத்து கனகரத்தினத்துப் பெண் சவ்வரிக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

S. இரத்தினசபாபதி, J. P
விரேசன் ரோட், கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
தோண்டாவில், 14-3-70 எம் 465 13-3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. V. K. சுப்பிரமணியமுக மனைவி
2. சிவபாக்கியலட்சுமி இருவரும்.
மூன்றுவது ஒழுக்குத்தெரு; யாழ்ப்பாணம்.
M. B. 8065 எதிராக —வழக்காளி
1. வைத்திலிங்கம் சூசைப்பிள்ளையும் மனைவி
2. அன்னம்மாவும் இருவரும் சண்டிக்குளி, —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 8065-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ந்திகதி (11-5-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3493/-ம், 18-3-1966 தொடக்கம் 24-9-1968 வரைக்கும் ரூபா 2000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 461-10 இதன் தீர்வையின் பின் கொடுத்த ரூபா 3000/- நீக்கவும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி பனங்காடு விக்க இருக்கும் காணியின் பெயர் பெரியதரையும மற்றும் பிரிவுகளும விஸ்தீரணம் நில பர ஐந்து (5) குளி 9 (ஒன்பது) இதில சீதனமாக முன்னே கொடுக்கப்பட்ட கிழக்குப் பக்கமாக நில. பரப்பு மூனறு (3) நீக்கி மிகுதியான நிலப்பரப்பு இரண்டு (2) குளி ஒன்பது (9) புதிதாக கட்டப்பட்ட கல்வீடும், அதன உரித்துக்களும் கிணற்றில் பங்கும் (கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணறு) வழிவாய்க்கால் உரித்தும், எல்லை கிழக்கு பஸ்தியாம்பிள்ளை தம்பிமுத்து மனுவல் மனைவி ஞானப்பூமாவின் ஆதனம். வடக்கு விக்டோரியா மகாராணி அரசாங்கத்தினத்தின் ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை, இதடங்கலும். பதிவு இல: D 273/39

"வேல் பதி" S. சங்கரப்பிள்ளை J. P.
புத்தூர். கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
10-3-70 எம். 456 20—3—70

## கோட்டு விற்பனவு விளம்பரம

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

அம்பலவாணர் நடேசபிள்ளை, மிருசுவில் —வழக்காளி
இல: 3501 எதிராக
கணபதிப்பிள்ளை அருணாசலம். புலோப்பளை, பளை, —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் 3501-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹூ சித்திரை மீ 18-ம் திகதி (18-4-70) சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1504/-ம் 10-1-68 தொடக்கம் 17-4-68 வரைக்கும் ரூபா 1000/-க்கு நூற்றுக்கு 9வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுததொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 225 ரூபா 70 சதமும் (8-9-69ல் இறுக்கப்பட்ட ரூபா 450/-ம், கோட்டுச் செலவு ரூபா 100/-ம் தவிர்த்து)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளிப் பகுதி, புலோப்பளை கோவிற்பற்று "கொக்குப்பீச்ச" தெற்பரப்பு 100 (100 Lms P. C) எல்லைகிழக்கு எலயாஸ் சுபக்கிரினதும், சிதம்பரப்பிள்ளை தம்பையாவினதும் ஆதனங்கள், வடக்கு முடிக்குரிய காணியும், மேற்கும், தெற்கும் கால சென்ற செல்லர் மயில்வாகனத்தின் உரிமைக்காரரினதும் ஆதனங்கள், இதடங்கலும். பதிவு இல B. 49/66

"நித்தியகல்யாணி" ஆ. சிவானந்தன்
பலாலி ரோட், கொமிஷனர் & விலைமதிப்பாளர்
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
10—3—70 எம். 466 20-3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புத்தூர் வடக்கு. 1. முருகேசு கணபதிப்பிள்ளை —வழக்காளி
வழ: M. B. 9651 எதிராக
புத்தூர் வடக்கு, 1. தம்பு கந்தசாமி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9651ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1ம், 2ம் துண்டுக்காணிகளை 1970 ம் ஹூ சித்திரை மாதம் 12-ம் திகதி (12—4—70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 1-ம துண்டுக்காணிக்குள் நின்று 10 மணிக்கும், 2-ம் துண்டுக் காணிக்குள் நின்று 10-30 மணிக்கும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 1560/- இதில் ரூபா 1600/-க்கு 28-12-1967 திகதி தொடக்கம் 27-6-1968 திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 240-87 இதில் ரூபா 925/- கொடுபட்டது

ஆதன விபரம்

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கு இறை "கட்டைக்காடு" நிலப்பரப்பு 90 எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நாகமுத்து தம்பிப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு இளையதம்பி அம்பலத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம தெற்கு தரிசு நிலமும ஆறுமுகம் ஐயாக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் 1/15 பங்கும் அதைச் சேர்ந்த பயிர் வகைகளும், கிணறும் விற்கப்படும்.

2. புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடககு இறை 'கிழுவு' நிலப்பரப்பு 6¾ எல்லை கிழக்கும, மேற்கும், தெற்கும் ஆறுமுகம் ஐயாக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு சின்னப்பு ஆறுமுகத்தின ஆதனம். இதில சொரியலாய் 1/8 பங்கும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
சித்தன்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
7-3-70, எம், 459, 20-3-70 வெக்டீஸ் மேஸ்தரும்

செந்தமிழ்க்கடலின் மீது.......
(2-ம் பக்கத்து வளர்ச்சி)

நல்லூர் முருகனோடு நாவலர் பெருமானின் உருவமும் காட்சியளிப்பதைச் சைவத் திருவாளர்கள் கண்டு கேட்டுச் சிவநெறியொழுகுவது நன்று. யாழ்ப்பாணம் மட்டுமன்றி இந்தியாவும் பாராட்டிக் கொண்டாடுவது இன்றும் உண்டு. அச்சேய அப்பெரியார் நூல்களைக்கற்றுச் செந்நெறி ஒழுகுவதும் கடமையாகும். ——

## COMMISSION SALE
### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9258
கரவெட்டி மேற்கு கரவெட்டி
S. வஸந்தாமபிள்ளை சாமிநாதர் —வழக்காளி
எதிராக
1. பருத்தித்துறை. சிதம்பரம்பிள்ளை அன்னலிங்கம்
2. சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சிவகாமிப்பிள்ளை —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 12-ம் திகதி (12-4-70) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை சிங்கபாகுந்தவன் குறிச்சியிலுற ஒ ராயன் மணல் நிலப்பரப்பு ½ ஒராயன் மணல் நிலப்பரப்பு 1, 7/8 இதல் மேற்குப்புறமாகக் குளி 17, 5/8 ஒரு துண்டு. கூடிய நிலப்பரப்பு 1குளி 4, 1/8 இதற்கு 1962-ம் ஆ மாசி மாதம் 26-ந் திகதி உலாந்தா மேஸ்தர் க. வேல்முருகுவால் 3697-ம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தின் படி நிலப்பரப்பு 1 குளி 3 இது குறித்த படத்தில் 1, 2, 3, 4 என அட்சரமிடப்பட்ட துண்டுகளாயிருக்கின்றன. இதில் குறித்த படத்தில் 1-ம, 3-ம நம்பர் துண்டுகளுக்கு குளி 10½ "A" என அட்சரமிடப்பட்ட கல்வீடும எல்லை கிழக்கு பரஞ்சோதி பெண் இராசமணிக்குடைய குறித்த படத்தில் 1ம நம்பர் துண்டு வடக்கு ஒழுங்கை. மேற்கு ஆறுமுகம இராசையாவுக்குடையவாதனம் தெற்கு வேலுப்பிள்ளை எரம்புவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும். குறித்த படத்தில் ஒரு குளிகொண்ட 4ம நம்பர் துண்டில் அரைவாசியும்.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை ரூபா | 2162-50 |
| ரூபா 1500க்கு 4-9-66 தொடக்கம் 28-5-67வரை 9 வீத வட்டி | 99-00 |
| | 2261-50 |
| முழுத்தொகைக்கும் 29-2-68 வரை 5%வட்டி | 84-80 |
| | 2346-30 |
| ரூபா 2261-50க்கு 30-2-68 தொடக்கம் 30 2-70வரை 5%வட்டி | 226-10 |
| செலவு | 255-48 |
| மொத்தம் | 2827-88 |
| இதில் கொடுபட்ட தொகை | 800-00 |
| | 2027-88 |

V. M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
வல்வெட்டித்துறை
1-3-70 எம், 458 13.3-70

# THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following **Rates of Interest**

1 Year 9 % per annum
2 Years 10 % „ „

FOR CHARITABLE INSTITUTIONS
12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N. B. These Deposits could be Withdrawn
At Any Time by Giving the Firm
30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN
by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 „ „ — „ 7 % . „

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

8 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { FOR CHARITABLE INSTITUTIONS

*Head Office:* THIRUNELVELY, **JAFFNA**
*Branch* „ : VANNARPONNAI, **JAFFNA**


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 8471

சுதுமலை, தற்போது இங்கிலாந்தில் வசிக்கும்

1. அருணாசலம் தம்பிப்பிள்ளை சுந்தரமூர்த்தியும் பெண் புஷ்பாசனியும் இவர்களின் தத்துவகாரன் சுதுமலை,
2. ஆறுமுகம் சின்னத்தம்பி ஆறுமுகம் —வழக்காளர்

எதிராக

குணரத்தினம் ஜயசிங்கம் ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, தனது தாயார், காலஞ்சென்ற குணரத்தினம் கைம்பெண் குட்டிப்பிள்ளையின் ஆதனத்துக்குச் சட்டப் பிரதிநிதி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8471-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ம் ஆண்டு ஏப்ரில் மீ 27-ஆம் திகதி (27-4-70) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 8100/-க்கு மேலும் ரூபா 6000/-க்கு 19-6-66 தொடக்கம் 14-3-67 வரை 10 வீத வட்டியுங் கூட்டிய தொகைக்கு 14-3-67 தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 384-99 சதம் இதில் ரூபா 7000/- கழிபட வேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "வரசாட்டி" நில. பா (10) பத்தும் இணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு அப்புத்துரை கைம்பெண் சிவக்கொழுந்து ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு கைவொழுங்கை, தெற்கு சான்ஸ் ஸ்றீனிவாசனுடைய ஆதனம்.

செ. இரத்தினசபாபதி J.P.
கொமிசனரும்விலைமதிப்பாளரும்.
ஸ்ரேசன் றோட்டு,
கோண்டாவில் 1-3-70.
எம். 456 20-3-70

## ஸ்ரீ திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம், 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ ல. ஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10425

பொன்னையா பழனிசாமி கைம்பெண் ஆழ்மெல்லம்மா;
கன்னுகிட்டிவீதி யாழ்ப்பாணம். — வழக்காளி

எதிராக

சுந்தரம் காராளபிள்ளை
இல. 17/4, றெயில் வீதி
யாழ்ப்பாணம் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10425-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு வைகாசிமீ 12-ஆம் திகதி (12-5-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1405/-ம் 9-11-68 தொடக்கம் தீர்வைத் திகதி வரைக்கும் ரூபா 1000-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 257-46.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் வண்ணார்பண்ணை இறை வண்ணார்பண்ணை தென் கிழக்கு "பனன்காடு" எனும் காணித்துண்டு நில. பா, இரண்டும் (2) குளி ஒன்பதும் (9, வீடு குடிசை, கிணறு, செய்பயிர் வன் பயிர்களும் மற்றும் சொத்துரிமைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு திருவேங்கடம் பெண் பாக்கியலட்சுமியின் ஆதனம், மேற்கு வெஸ்லியன் மிசன் பாடசாலையின் ஆதனமும் பெருமாள்கோவில் ஆதனமும். தெற்கு கணபதிப்பிள்ளை கந்தையாவின் ஆதனம்,

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales
"வேல்பதி" புத்தூர்
10-3-70. (எம். 457. 13-3-70

திருவுளப்படி, ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருஅவதாரத் தலமான சீகாழியில், ஆதீனத்திற்குச்சொந்தமான ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில், 'திருஞானசம்பந்தர்" நினைவாக திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபம் 1½ (ஒன்றரை) இலட்சம் ரூபாய் திட்டத்தில் கட்டுவதற்கு, மார்ச் 1-ம்நாள் காலை மாநில இந்து அறநிலைய ஆணையர் உயர்திரு K. S. நரசிம்மன் அவர்கள் தலைமையில் தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் உயர்திரு K. V சுப்பையா அவர்கள் அடிக்கல் நாட்டினர்.

அமைச்சர் திரு. சுப்பையா அவர்கள், அறநிலைய ஆணையர்

(5-ஆம் கலம் பார்க்க)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 9729

1. ஆறுப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கம்
2. ஆறுப்பிள்ளை இராசநாயகம் —வழக்காளிகள்

எதிராக

1. கந்தர் செல்லையாவும் மனைவி
2. இலட்சுமியும்
3. முருகர் இராசமும் மனைவி
4. சிவபாக்கியமும் எல்லோரும் மயிட்டி வடக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9729-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1970-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் திகதி (11-4-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 481-00 3-2-68ல் இருந்து 13-1-69 வரைக்கும் ரூபா 3000-00 க்கும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபா 3:4-58

ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம டிஸ்திறிக், வலிகாமம் வடக்கு மயிலிட்டி கோவிற்பற்று மயிலிட்டி இறை "அக்கத்தலை" நிலப்பரப்பு 3, 7/16 இதற்கு எல்லை கிழக்கு முருகன் காசியின் ஆதனம். வடக்கு சின்னன் முருகனுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய ஆதனம். மேற்கு சங்கரப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆதனம், தெற்கு பெரியார் அம்பலத்தின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷை இறை "கொத்தவத்தை" நிலப்பரப்பு 2 குழி 11¼ இதற்கு எல்லை கிழக்கு வயிரவன மாலாணியின் ஆதனம். வடக்கு வல்லி முதலியின் ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு தவசி பெண் வள்ளியின் ஆதனம், இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

கா. தர்மலிங்கம்,
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
உரும்பிராய், 2-3-70
எம். 472 20-3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல. M B 7425

1. பொன்னம்பலம் சுப்பிரமணியம் 2. பெண் சேதுப்பிள்ளை (இருவரும், களபூமி, காரைநகர் கிழக்கு, காரைநகர்) —வழக்காளிகள்

எதிராக

முதலாம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தம்பு முத்துராசா கைம்பெண் பாக்கியம் காலஞ்சென்ற தம்பு முத்துராசாவின் பிரதிநிதியாக — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7425-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு வைகாசிமீ 2-ஆம் திகதி (2-5-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5779/-ம் 21-5-65 தொடக்கம் 29-11-69 வரைக்கும் ரூபா 3612/-க்கு 15% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "கழுத்தறுதனும் தவ்வடை" பா நில. இல. ½ கல் விடு இதற்கு எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு T. அருமைநாயகத்துக்குரிய ஆதனம் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக்கு சேர்மதியான ஆதனம், தெற்கு கந்தையாவுக்குரிய ஆதனம். பதிவு இல: D. 224/269

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில் வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்
3-3-70 எம். 461 20 3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 10132

1 பொன்னம்பலம்சிவானந்தனும்
2. பெண் சொர்ணம் மானிப்பாய் —வழக்காளிகள்

எதிராக

1. கிருஷ்ணபிள்ளை காசிலிங்கமும்
2. பெண் புவனேஸ்வரி
3. சபாபதி நாகமுத்துவும்
4. பெண் செல்லக்கண்டு

சுதுமலை (மானிப்பாய் இணுவில் றோட்டு) —எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 10132-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகள் 1970-ஆம் ஆண்டு ஏப்பிறில் (சித்திரை)மீ 11-ம் திகதி (11-4-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: 3521/-ம் 7-7-68 ம் திகதி தொடக்கம் 21-1-69 வரைக்கும் ரூபா 2000/-க்கு 10 வீதவட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 306-10 சதம். இதல் ரூபா 100/ கொடுபட்டது.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று சுதுமலை சிறுமணியன் தோட்டம் பரப்பு நில லாச்சம் 2-ம் மேற்கு நிலக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வடக்கு வேலி அருகாக பாதை வழி வாய்க்கால் உருத்தும் எல்லை கிழக்கு சபாபதி நாகமுத்துவின் ஆதனம். வடக்கு பிரதான ஒழுங்கை தஞ்சயம் றோட்டு மேற்கு சபாபதி நாகமுத்துவுக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் சீதைக்குரிய ஆதனம் வடக்குப் பக்கமாக கிணற்றோடு மிகுதி காணிக்கு பாதை வழி வாய்க்கால் பாவிட்டு உருத்து புறநீங்கல் பதவு இல E 345/179.

2. மேற்படி இறை "பெரிய தோட்டம்" மடைப்பும் பெரிய தோட்டமும் பரப்பு நிலலாச்சம் 2ம் குழி 6¾ வீடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் பொன்னிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் வடக்கும் மேற்கும் சபாபதி மாரிமுத்துவுக்குரிய ஆதனம் தெற்கெல்லைக் கிணற்றில் பங்கும் தார்வை வழிவாய்க்கால் உருத்தும். பதவு இல 313/77

3. மேற்படி இறை பெரிய தோட்டமும் மடைப்பும் பெரிய தோட்டமும் பரப்பு நில லாச்சம் 4 5/8 கிழக்கு 2-ம் எதிரியின் ஆதனம். வடக்குறோட்டு மேற்கு பொன்னையா கனகரத்தினத்துக்கும் பெண் அழகமலருக்கும் உரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை, பதவு இல E 313/192.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
"விதானை வளவு"
சித்தன்கேணி. 5-3-70.
M. 467 20-3-70

## தேகவியோகம்

மலாயாவில் முதல் கணக்குப் பகுதியில் முதல் லிகிதராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு அ சு. வல்லிபுரம் அவர்களின் பிரியமுள்ள பாரியார், திருமதி சிவக்கொழுந்து அவர்கள் 5-3-70 வியாழக்கிழமை தமது 68வது வயதில் சிவபதமடைந்தனர். அம்மையார் கடவுள்பக்தி பதிபக்தி, ஈகை இன்சொல், முதலிய பண்புகள் பொருந்தியவர். அவருடைய பிரிவினால் துயருறும் அவருடைய கணவனுக்கும், சுற்றத்தாருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## திருஞானசம்பந்தர்

2-ஆம் கலத் தொடர்ச்சி)

திரு திரு. நரசிம்மன் அவர்கள், துணை ஆணையா திரு. சிங்கார வேலர் அவர்கள் மூவரும் அருகிலே ஆதீன தலை 27 திருக்கோவில்களும் 27 நட்சத்திரங்களைக் கொண்டு நிகழ்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக 27 தென்னம்பிள்ளை நட்டினர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 8832

1. செல்லையா தர்மலிங்கமும்
2. பெண் நடேஸ்வரி இருவரும், ஆர்யாலை —வழக்காளிகள்

எதிராக

1. குமாரசாமி ராசதுரையும்
2 பெண் சாவித்திரியும் இருவரும் சண்டிக்குளி, நல்லூர் தெற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8832-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20-ம் திகதி (20-4-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4500/-ம் 11-2-67 தொடக்கம் 5-10-67 வரை ரூபா 2250/-க்கு 12 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 391-70

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சண்டிக்குழி கோயிற்பற்று சிவியாதெரு "புளியடி வளவு" ப. வி. 3 இதில் கிழக்குப் பக்கமாக ப. வி 2ம் கிணறும் தென்னைகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு இந்தக் காணிக்குள் அமைந்த நாலு மூலை அகலமுள்ள ஒழுங்கை மிகுதி ராசா பெண் அன்னம்மாவுக்கு பாதை மேற்கு ராசா பெண் அன்னம்மாவின் மிகுதி ஆதனம் தெற்கு பொன்னம்பலம் ரத்தினகதினத்தின் ஆதனம் இந்தக் காணியில் இருக்கும் கிணற்றில் மிகுதி ஆதனத்துக்கும் வடக்கெல்லைக் காணிக்கும் உரிய பங்கும் கிணற்றில்மேற்குப்பக்கப் பாதை வழிவாய்க்கால் மிகுதிக் காணிக்கும் வடக்கெல்லை ஒழுங்கைக்கும் பாதை வழிவாய்க்கால் உருத்து புறநீக்கல் இதில் மிகுதி அடங்கலு ப இ D 247-4

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
விதானை வளவு, சித்தன்கேணி
20-2-70 எம். 488 20-3-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 20—3—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்